07.04.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 375/2021

அ.சா.15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எஸ். ஆறுமுகம் | | |
| த/பெ | செல்வராஜ் | | |
| கிராமம் | காட்டுமன்னார்கோவில் | தொழில் | |
| தாலுக்கா | காட்டுமன்னார்கோவில் | வயது | 49/2025 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது காட்டுமன்னார்கோவில் காவல் நிலையத்தில் காவல் வட்ட ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2021- வருடம் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிவபெருமான் பாளையத்தைச் சேர்ந்த ஐயப்பன் மனைவி நதியா என்பவர் கடந்த 25.04.2021- ம் தேதி இரவு 8.30- மணியளவில் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்து பூர்வமான புகாரை உதவி ஆய்வாளர்

திரு. பரணிதரன் அவர்கள் பெற்று நிலையக்குற்ற எண். 221/2021 இ.த.ச பிரிவுகள் 294(பி), 364, 323, 324, 307- ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என் பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான சிவபெருமான் பாளையம் பிள்ளையார் கோவில் அருகில் சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் ஆகிய மூவரும் அடையாளம் காட்டிய சம்பவ

இடத்தை இரவு நேரம் என்பதால் நான் குறிப்பு எடுத்துக்கொண்டு மேற்கண்ட சாட்சிகள் மூவரையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஐயப்பனை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்டவர் சிகிச்சையில் உள்ளாரா என்பதை விசாரணை செய்ய அவர் மருத்துவமனை பதிவேட்டின் படி அவசர சிகிச்சை பிரிவில் அன்று மாலை 05.00- மணிக்கு சேர்ந்துள்ளார் என்றும் தெரிந்து அவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டைப் பெற்றேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ. 18 ஆகும். அன்று இரவு சுமார் 01.00- மணியளவில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற மருத்துவ தகவலில் காயம்பட்ட ஐயப்பன் என்பவர் இறந்துவிட்டதாக தகவல் பெறப்பட்டது. மேற்படி தகவலின் படி இறந்துபோன ஐயப்பனின் மனைவி காவல் நிலையம் வந்து தன் கணவர் இறந்தது உண்மை என தகவல் தெரிவித்தார். வழக்கின் சட்டப்பிரிவினை இ.த.ச பிரிவுகள் 294(பி), 364, 323, 324, 307- ல் இருந்து 294(பி), 364, 302 இ.த.ச படி பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.19 ஆகும். அதன் பிறகு 26.04.2021-ம் தேதி காலை 06.00- மணிக்கு வழக்கின் சம்பவ இடமான சிவபெருமான் பாளையம் பிள்ளையார் கோவில் தெரு முனியம்மாள் என்பவரின் புதியதாக கட்டிக்கொண்டிருக்கும் வீட்டின் அருகில் உள்ள சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். சாட்சிகளிடம் அதில் கையொப்பம் பெற்றேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.20 ஆகும். அதன் பிறகு வழக்கின் 2- வது சம்பவ இடமான திருக்கனூர் ஏரிக்கரை அருகில் உள்ள மாரியம்மன் கோவில்

அருகில் காலை 07.00- மணிக்கு சென்று சாட்சிகள் செந்தில்குமார், கார்த்திகேயன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் , பார்வை மகசர் தயார் செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த மாதிரி வரைபடம் ஆகும். அது அ.சா.ஆ.21 ஆகும். மேற்படி சாட்சிகள் செந்தில் குமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோரிடம் விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு காலை சுமார் 07.45 – மணிக்கு சிவபெருமான் பாளையம் பிள்ளையார் கோவில் தெருவில் முனியம்மாள் புதிய வீட்டின் அருகில் சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜா முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த 1) இரத்த கறை படிந்த சிமெண்ட் காரை, 2) சாதாரண சிமெண்ட் காரை, 3) சுமார் 6 இன்ச் அளவுள்ள இரத்த கறை படிந்தது ஆகியவைகளை மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சி 6 இன்ச் அளவுள்ள கட்டையை சரியாக அடையாளம் காட்டினார். அது சா.பொ.10 ஆகும். அதன் பிறகு அதே தெருவில் பழனி என்பவரின் வீட்டின் முன்னும் பின்னும் 1) இரத்தக் கறை படிந்த மண் சிறிதளவு , 2) சாதாரண மண் சிறிதளவு, 3) இரத்தக் கறை படிந்த செங்கல் ஒன்று ஆகியவற்றை காலை சுமார் 08.15- மணிக்கு மகசர் தயார் செய்தேன். மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த செங்கல்லைப் ( அயிட்டம் 3) பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார். சாட்சி அந்த செங்கல்லை சரியாக அடையாளம் காட்டினார். அதன் பிறகு சுமார் 08.40 மணிக்கு அதே தெருவில்

உள்ள சம்பவ இடத்தில் உள்ள சிமெண்ட் தூணில் இருந்த இரத்தக் கறையை உடைத்து சிறிதளவு 1) சிமெண்ட் காரை ஒன்று , 2) சாதாரண சிமெண்ட் காரை சிறிதளவு எடுக்கப்பட்டு அதை மகசரில் கைப்பற்றினேன். (அந்த மகசர் அ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது ),. சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜா ஆகியோர்களிடம் விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்று காலை சுமார் 10.00- மணியளவில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ஐயப்பனின் பிரேதத்தை சாட்சிகள் அடையாளம் காட்ட பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.22 ஆகும். அதன் பிறகு விக்கிரவாண்டி காவல் நிலைய முதல் நிலை காவலர் வெங்கடேசன், ஐயப்பனின் பிரேதத்தை ஒப்புவித்தோம். பிரேதத்தை உடற்கூராய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியும், அது தொடர்பாக மற்ற நடவடிக்கைகளை செய்யக்கோரி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்து எதிரிகள் 4 பேரும் ஐயப்பனை முன்விரோதம் கொண்டு தாக்கி கொலை செய்தது உண்மை என தெரியவந்தது. அன்று மதியம் 01.00- மணியளவில் பனையபுரம் சந்திப்பு அருகே எதிரிகள் இருப்பதாக இரகசிய புலனாளி கொடுத்த தகவலின் பேரில் அங்கு சென்று எதிரிகள் 1. சரத்குமார், 2) சரவணன் 3) குமரவேல் , 4) ஜானகி ஆகியோர்களை பிடித்து விசாரிக்க அவர்கள் 4 பேரும் தங்களது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் கைதுக்கான காரணத்தை எடுத்துக்கூறி மதியம் 01.00- மணிக்கு கைது செய்தும், கைது குறித்து அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தேன். அதன் பிறகு அவர்களில் 1, 2, 3

எதிரிகள் சாட்சிகள் பெரியசாமி மற்றும் பச்சையப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் தன்னிச்சையாக எந்த வற்புறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார்கள். அதில் 1, 2, 3 எதிரிகள் சரத்குமார், சரவணன் மற்றும் குமரவேல் கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். பதிவு செய்து அதில் சாட்சிகள் , எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் தன்னை அழைத்துச்சென்றால் நாங்கள் ஐயப்பனை அடித்த இடங்களையும், பயன்படுத்திய ஆயுதங்களையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதை பதிவு செய்து அதில் சாட்சிகள் , எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன். அவைகளில் 1- ம் எதிரி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-23- ஆகும். 2-ம் எதிரி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-24- ஆகும். 3- ம் எதிரி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-25- ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரிகள் அழைத்துச் சென்ற இடத்திற்கு சாட்சிகளுடன் சென்று சம்பவ இடத்தை அடையாளம் காட்டியதில் 1- ம் எதிரி சரத்குமார் அவர் 05.30- மணியளவில் சிவபெருமான் பாளையம் தன் மாட்டுக்கொட்டகை அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1) PY-05- H- 1570 என்ற பதிவெண் கொண்ட Honda X Blade சாம்பல் நிற இருசக்கர வாகனம் ஒன்று ,2) சுமார் 2- ½ அடி நீளமுள்ள மரத்தால் ஆன இரத்தக்கறை படிந்த கட்டில் கால் ஒன்று இவைகளை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்தார். அவைகளை மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ-26- ஆகும். அந்த மோட்டார் சைக்கிளைப் பார்த்தால் என்னால் அடையாளம்

காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் அந்த மோட்டார் சைக்கிளின் புகைப்படங்கள் ( எண்ணிக்கை 2) அ.சா.ஆ.27- ஆகும். அந்த கட்டிலின் காலைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்

( அயிட்டம் எண். 2) சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அந்த கட்டிலின் கால் சா.பொ. 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு மாலை 06.00- மணிக்கு 2- ம் எதிரி சரவணன் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த இரத்தக் கறை படிந்த இரும்பு ஸ்பேனர் ஒன்றை சாட்சிகள் பெரியசாமி, பச்சையப்பன் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ-28 ஆகும். அந்த இரும்பு ஸ்பேனரைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என் சாட்சி கூறினார். அதை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அது சா.பொ. 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 06.30- மணியளவில் 3- ம் எதிரி குமரவேல் அடையாளம் காட்டிய சிவபெருமான் பாளையம் வாட்டர் டேங்க் பின்புறம் உள்ள வாழைத்தோப்பில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 1-3/4 அடி நீளமுள்ள இரத்தக் கறை படிந்த ஒருபக்கம் எரிந்த நிலையில் ஒழுங்கற்ற கட்டை ஒன்றை மகசரில் கைப்பற்றினேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த மகசர் அ.சா.ஆ-29 ஆகும். சாட்சி அந்த பொருளை சரியாக அடையாளம் காட்டினார். அந்த கட்டை சா.பொ. 2 -ஆக அ.சா.1 -ன் மூலமாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளிடம் விசாரணை முடித்து நான் 4 எதிரிகளையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று உச்சநீதிமன்ற கட்டளைகளை முறையாக பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்மூலம் பதிவு செய்தேன். பிறகு

உடற்கூராய்வு செய்த மருத்துவர் திரு. மதுவதனன் அவர்களை விசாரணை செய்து அறிக்கை பெற்று , அவரிடம் வாக்மூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் நதியா , கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகிய மூவரையும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் இளையராஜா, துரை, ஜெயகணேஷ் , சாட்சி கனகா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்மூலம் பதிவு செய்தேன். விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வக வல்லுநர்கள் திருமதி. ஷர்மிளா மற்றும் ராஜு ஆகியோர்களை விசாரணை செய்து , பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். அந்த இரசாயன குருதியியல் அறிக்கை

SER/ VPM/107/2021 Dt. 25.07.2022 , SER/VPM/100/2021 Dt. 04.08.2022 அ.சா.ஆ 30- ஆகும். டாக்டர் மங்களமுருகனை விசாரணை செய்து விபத்து பதிவேட்டை பெற்றேன். ( அது ஏற்கனவே என்னால் அ.சா.ஆ 18- ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, ) அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. பரணிநாதன் மற்றும் 2-ம் நிலை காவலர் வெங்கடேசன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார். 1, 2, 4 எதிரிகளை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். 3-ம் எதிரி குமரவேல் அவர்களுக்கு 317 – குவிமுச படி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிறகு கைப்பற்றிய வழக்குச்சொத்துகளை படிவம் - 95 க்கு மாற்றி அவைகளை முறையாக வழக்கு சொத்தினை படிவம் - 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பு வைத்தேன். அந்த படிவம் -95 கள் (எண்ணிக்கை 6) முறையே அ.சா.ஆ. 31 முதல் 36 வரை ஆகும். என் விசாரணை முடித்து உதவி இயக்குநர் அரசு தரப்பு

அவர்களின் ஒப்புதல் பெற்றேன். அவர்களுடைய அறிவுரையின் படியும், என் விசாரணையின் படியும், பிரிவுகள் இ.த.ச.294(பி), 364,323,324,307 மற்றும் 302 – ல் இருந்து இ.த.ச. 341, 294(பி), 364, 323, 324, 302,120(பி) ,352, உ/இ. 34, உ/இ. 109 படி பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ. 37 – ஆகும். என் விசாரணை முடித்து எதிரிகள் 1. சரத்குமார் த/பெ. சரவணன், 2) சரவணன் த/பெ. காத்தவராயன் , 3)குமரவேல் த/பெ. கிருஷ்ணன் 4) ஜானகி க/பெ. குமரவேல் ஆகியோர்கள் மீது மேற்படி சட்டபிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சி பிரகாஷ் என் விசாரணையில் எதிரிகள் ஐயப்பனை தாக்கியதை நேரடியாக பார்த்ததாகவும், மருத்துவமனைக்கு ஐயப்பனை அழைத்துச் சென்று சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்த விவரங்களை விசாரணையிலும், மறுவிசாரணையிலும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சிகள் பெரியசாமி, பச்சையப்பன் ஆகியோர்கள் எதிரிகளை கைது செய்யும் போது உடனிருந்து எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பம் செய்தது பற்றியும், வழக்கு சொத்துக்களை எதிரிகள் ஆஜர் செய்து கைப்பற்றியபோது மகசரில் சாட்சியாக கையொப்பம் இட்டது பற்றியும் கூறியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி கனகா இவ்வழக்கில் இறந்துபோன ஐயப்பனை எதிரிகள் திருக்கனூரில் இருந்து இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்ததை பார்த்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

## எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு கோப்புகள் எனது பார்வைக்கு 25/04/2021 ஆம் தேதி இரவு 21.30 மணிக்கு வைக்கப்பட்டது. புகார்தாரர் நதியா கொடுத்த புகாரை படித்து பார்த்தேனா என்றால் படித்துப்

பார்த்தேன். இந்த சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இரண்டாம் எதிரியின் மனைவி விஜயகுமாரியை இறந்து போன ஐயப்பன் தாக்கியதாக ஒரு புகார் எங்கள் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக புகார் அளிக்கப்பட்டதற்கு பின்பாக இடைப்பட்ட நாட்களில் எந்தவித பிரச்சனையும் இரு குடும்பத்திற்கும் ஏற்பட்டதாக எங்களுக்கு புகார் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்த வழக்கு சம்பவம் பகல் 12:00 மணிக்கு நடந்தது. புகார்தாரர் நதியா இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்தது இரவு 8 மணி என்றால் 8.30 மணிக்கு புகார் கொடுத்தார். இடைப்பட்ட காலதாமதம் எதற்கு என்று அந்த புகார்தாரரை விசாரித்தேனா என்றால், விசாரித்தேன். புகார்தாரர் தனது கணவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு மாலை 5 மணிக்கு கொண்டு சென்றதாகவும், திரும்ப வந்து புகார் கொடுத்ததாகவும் என்னிடம் தெரிவித்தார். அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லும் சிவபெருமான் பாளையத்திற்கும் எங்கள் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 15 கிலோமீட்டர் தூரமாகும். முதல் தகவல் அறிக்கை கலம் ஐந்தில் அது போன்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சிவபெருமான் பாளையத்திலிருந்து எங்களது காவல் நிலையம் 7 கிலோமீட்டர் தூரம் என்றால், சுமாராக 15 கிலோமீட்டர் இருக்கும். சம்பவம் நடந்த 12 மணியிலிருந்து மாலை 5 மணிக்குள் இடைப்பட்ட 5 மணி நேரத்தில் ஊர்க்காரர்களோ, அல்லது நதியாவின் உறவினர்களோ, எங்கள் காவல் நிலையத்திற்கு இந்த சம்பவம் குறித்து தகவல் ஏதாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. நதியா தனது கணவருடன் பிரச்சினை ஏற்பட்டு தனது தாய் வீடான பண்ட சோழநல்லூருக்கு சென்று விட்டதாக வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் எந்த தேதிக்கு சென்று எப்போது திரும்பி வந்தார் என்று புகாரிலோ எனது புலன் விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விஜயகுமாரிக்கும் இறந்து போன ஐயப்பனுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையில் பயந்து ஐயப்பன் எங்கோ சென்று விட்டதாகத்தான் புகார்தாரர் நதியா தனது

புகாரில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். ஐயப்பன் திருக்கனூரில் பதுங்கி இருந்த விவரத்தை ஒன்றாம் எதிரி எப்படி, யார் மூலம் தெரிந்து கொண்டார் என்பதை புகார்தாரர் தனது புகாரிலோ, நான் எனது புலன் விசாரணையிலோ, இறுதி அறிக்கையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஒன்றாம் எதிரி ஐயப்பன் பதுங்கி இருந்த விவரத்தை இரண்டாம் எதிரிக்கு எப்போது எப்படி தகவல் கொடுத்தார் என்ற விவரத்தை நான் எனது இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் ஐயப்பனை கொண்டு வரும்போது 1, 2 எதிரிகள் ஆயுதத்துடன் வந்ததாக புகார்தாரர் தனது புகாரில் எங்காவது சொல்லியுள்ளாரா என்றால், குறிப்பிட்டு சொல்லவில்லை. புகார்தாரர் ஒன்றாம் எதிரி கட்டில் காலால் ஐயப்பனை அடித்துள்ளார்கள் என்றும், இரண்டாம் எதிரி ஸ்பேனரால் ஐயப்பனை அடித்துள்ளார்கள் என்றும், தனது புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 3,4, எதிரிகள் ஐயப்பனை அடிக்க போகும்போது தடுக்க போன நதியாவை தள்ளி விட்டதாக புகாரில் நதியா சொல்லவில்லை என்றால் தவறு. சொல்லியுள்ளார். தடுக்கப் போகும்போது தள்ளிவிட்டதாக புகாரில் குறிப்பிட்டுள்ளார். அதுபோன்று விழுந்து அடிபட்டதாக புகார்தாரர் தனது புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. 3,4 எதிரிகளுக்கு எப்படி சம்பவம் குறித்து தெரியும் என்றும், எப்படி சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும் புகார்தாரர் தனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மூன்று சம்பவ இடங்களில் சம்பவம் நடந்த நேரங்களுக்கான இடைவெளி எதையாவது புகார்தாரர் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. இரண்டாவது சம்பவத்தின்போது பழனி வீட்டின் பின்புறம் 1, 2 எதிரிகள் அங்கு இருந்ததாகவோ அடித்ததாகவோ புகாரில் சொல்லவில்லை என்றால், சரிதான். தாக்கியதாக இல்லை. மூன்றாவது சம்பவ இடமான வாட்டர் டேங்க் அருகில் எதிரிகள் எந்த ஆயுதங்களை கொண்டு ஐயப்பனை தாக்கினார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால், எந்த வகையான ஆயுதம் என்று குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இட தெருவாசிகளோ,

ஊர்க்காரர்களோ, அல்லது கண்ணுற்ற சாட்சியாக கூறப்படும் கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் இவர்களோ, அதைப் பார்த்து மருத்துவமனைக்கு ஐயப்பனை ஏற்றி விட்டதாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தடியை குமரவேல் எடுத்துவிட்டு சென்றதாகவோ, அல்லது சம்பவ இடத்தில் போட்டு விட்டு சென்றதாகவோ, அந்த தடி எரிந்த நிலையில் இருந்ததாகவோ, புகார்தாரர் தனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வழக்கின் விபத்து பதிவேட்டை பார்த்தேனா என்றால் பார்த்தேன். மூன்று தெரிந்த ஆண் நபர்கள் மரத்தடி, இரும்பு பைப், மற்றும் கத்தியை கொண்டு தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் 2.00 மணிக்கு நடந்ததாக மருத்துவர் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். சிவபெருமான்பாளையம் பெருமாள் கோயில் தெருவில் புகார்தாரரின் கணவரை தாக்கிய நேரத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அவரை திருக்கனூர் ஏரிக்கரையில் மதியம் 12.00 மணிக்கு அழைத்து வந்த விவரத்தை விபத்து பதிவேட்டில் புகார்தாரர் தெரிவிக்கவில்லை. 12.00 மணிக்கு முனியம்மாள் புதியதாக வீடு கட்டும் இடத்திற்கு அருகில் தாக்கியதாகவோ அல்லது பழனி வீட்டின் அருகிலும் ஐயப்பனை எதிரிகள் தாக்கியதாக விபத்து பதிவேட்டில் புகார்தாரர் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 12.00 மணிக்கு ஐயப்பனை 1, 2 எதிரிகள் திருக்கனூரில் அழைத்து வந்ததாக எனது விசாரணையில் தெரியவந்தது. 12.00 மணிக்கும் 5 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் நதியா எங்கு சென்றார், ஐயப்பன் எங்கு சென்றார், என்ற விவரத்தை புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் தவறு. சுமார் 12 மணியிலிருந்து 2 மணி வரையில் சம்பவ நேரமாகும். அதன்பிறகு புகார்தாரர் ஆம்புலன்ஸ் வரவழைத்து ஏற்றும் வரை, தன் கணவருடன் இருந்து மருத்துவமனையில் மாலை 5 மணிக்கு சிகிச்சைக்கு சேர்க்கும் வரை உடன் இருந்துள்ளார். விபத்து பதிவேட்டில் 5 மணிக்குதான் ஐயப்பனை சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட 3 மணி நேரத்தில் புகார்தாரர் நதியா கணவருடன் இருந்ததாக தெரிவித்தார். இதுகுறித்து புகார்தாரர் தனியாக குறிப்பிடவில்லை.

திருக்கனூர் ஏரிக்கரையில் குறிப்பாக எந்த இடத்தில் இருந்து ஐயப்பனை 1, 2 எதிரிகள் கூட்டி வந்ததாக புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். திருக்கனூர் ஏரிக்கரை என்பது புதுவை மாநிலம் திருக்கனூர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். அந்த காவல் நிலையத்தில் நதியாவை புகார் கொடுக்க சொல்லி ஏதாவது அறிவுறுத்தப்பட்டாரா என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கு 8:30 மணிக்குத்தான் தகவல் வந்தது என்றால் சரிதான். அதற்கு முன்பாக எங்களது காவல்நிலையத்தில் இருந்து சிவபெருமான் பாளையத்திற்கு யாராவது சென்றார்களா என்றால் போகவில்லை.

( குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்தி வைக்கப்படுகிறது)